01.04.2025

O.S.No.34/2014

வா.சா.1.திரு.சூடாமணி த.பெ.அம்மாசி என்ற நல்லு

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

குறுக்கு விசாரணை

தாவா சொத்து ஆதியில் திருவரசு நாடாருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். அவரது ஒரே மகன் வேல்முருகன் நாடார் என்றால் சரிதான். வேல்முருகன் நாடாருக்கு சிவனம்மாள் என்ற முதல் மனைவியும், யசோதம்மாள் என்ற இரண்டாவது மனைவியும் உண்டு என்றால் சரிதான். சிவனம்மாளுக்கு பஞ்சவர்ணம், மூக்கம்மாள், திருவரசு என்ற செம்மாது ஆகியோர்கள் மக்கள் என்றால் சரிதான். யசோதையம்மாளுக்கு பிச்சை, பழனி என்ற இரண்டு மக்கள் உண்டு என்றால் சரிதான். திருவரசு என்ற செம்மாதுக்கு இரண்டு மனைவிகள் என்றால் ஒரு மனைவி உண்டு என்று தெரியும். அவருக்கு ஒரு பெண் குழந்தை உண்டு என்று தெரியும். மற்றொரு மனைவி இருப்பது எனக்கு தெரியாது. திருவரசு என்ற செம்மாதுவின் முதல் மனைவி ராஜம்மாள் என்றால் சரிதான். அவருக்கு ஒரே பெண் குழந்தை சாந்தி என்றால் சரிதான். இரண்டாவது மனைவி பஞ்சவர்ணத்திற்கு நாகலெட்சுமி, விஜயா, முருகன் என்ற மூன்று மக்கள் உண்டு என்றால் எனக்கு தெரியாது. எனது தந்தை பொன்னுத்தாயி என்பவரிடமிருந்து கிரையம் பெற்றார் என்றால் சரிதான். மேற்படி பொன்னுத்தாயிக்கு திருவரசு என்ற செம்மாது அவருக்காகவும், அவரது முதல் மனைவி குழந்தையான சாந்தி என்பவருக்காகவும், மட்டுமே கிரைய ஆவணம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். பொன்னுத்தாயிக்கு திருவரசு என்ற செம்மாதுவின் இரண்டாவது மனைவி மக்களான நாகலெட்சுமி, விஜயா, முருகன் ஆகியோர்களை கட்டுப்படுத்தி கிரைய ஆவணம் எழுதி கொடுத்தாக காணப்படவில்லை என்றால் சரிதான்.

2. 1 ம் பிரதிவாதி அழகர்சாமி 1975 ஆம் ஆண்டு திருவரசு என்ற செம்மாதுவின் தந்தை வேல்முருகன் நாடார் என்பவரிடமிருந்து கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். அதற்கு முன்பே பொன்னுத்தாயிக்கு கிரையம் கொடுத்துள்ளார்கள்.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வேறு ஒரு தேதியில் ஒத்தி வைக்கப்படுகிறது )